Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 20-6-1985 வியாழக்கிழமை (ஆனி 6 ஷவ்வால் 1) முழக்கம் 135

## ஜனாதிபதியின் சகோதரரும் ராஜீவும் தனிமையில் பேச்சு

இலங்கை சட்ட அறிஞர்கள் குழுவுக்குத் தலைமை தாங்கி புதுடில்லி சென்றிருக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் சகோதரர் ஹரி ஜெயவர்த்தன கியூ ஸி நேற்று பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து, தனிமையில் அரை மணி நேரம் பேசினார் வட, கிழக்கு மாகாணங்களில் உருவாக்கப்படவிருக்கும் புதிய சபைகளின் அமைப்புகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன திரு. ஜெயவர்த்தனவும் அவருடன் சென்ற மற்றைய ஐந்து சட்ட அறிஞர்களும் இன்று கொழும்புக்குப் புறப்படுகின்றனர்.

## அமிர்: யுத்தநிறுத்தம் அர்த்தமுள்ள நடவடிக்கை தீவிரவாதிகளும் பேச்சில் பங்குபற்றவேண்டும்

(சென்னை)

இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள 'போர் நிறுத்த' முடிவை 'அர்த்தமுள்ள நடவடிக்கை' என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண 'போர் நிறுத்தம்' நிச்சயமாக உதவுமெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்த போதே இதனை ஒரு அர்த்தமுள்ள நடவடிக்கை என்று திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

தீவிரவாத இளைஞர் இயக்கங்களின் தலைவர்களை இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியது அத்தியாவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்,

அதேவேளையில் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. பழனியாண்டி இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், ''பாரதத்தின் ராஜீய துறை நடவடிக்கைக்குக் கிடைத்த முதல் வெற்றி'' என்று வர்ணித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கும்

- 4-ஆம் பக்கம் பார்க்க

# ஐந்து பொலிஸ் நிலையங்களை விரைவில் திறக்க நடவடிக்கை!

## ஊரடங்குச் சட்டத்தை முற்றாக நீக்க ஆலோசனை

### தேங்கிக் கிடக்கும் வழக்குகளை துரிதமாக விசாரிக்க பொலிஸார் உதவி வழங்குவர்

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழ்நிலையின் காரணமாக, சிவில் நிர்வாகத்தைப் படிப்படியாக வடக்கில் அமுலுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் பற்றி நேற்று கொழும்பில் ஆராயப்பட்டது. இதன் ஓர் அங்கமாக விரைவில் ஐந்து பொலிஸ் நிலையங்களை இங்கு திறப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் இம் மாத இறுதிக்குள் ஊரடங்குச் சட்டத்தை முற்றாக நீக்குவது பற்றியும், அவசியமானால் இரவில் பொலிஸ் ரோந்தை அறிமுகப்படுத்துவது பற்றியும் நேற்றைய சந்திப்பில் தீவிரமாக ஆராயப்பட்டது.

வடக்கிலுள்ள நீதிமன்றங்களில் தேங்கிக்கிடக்கும் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக பொலிஸார் தமது நீதிமன்றக் கடமைகளை ஓரிரு வாரங்களில் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பொது மக்கள் பொலிஸ் நிலையங்களில் புகார்களைப் பதிவு செய்வதற்கு வசதியாக தீவுப் பகுதி, பளைப் பகுதி, தென்மராட்சி, வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பகுதிகளில் ஏற்கனவே மூடப்பட்ட ஐந்து பொலிஸ் நிலையங்கள் தாமதமின்றித் திறக்கப்படக் கூடும்.

யாழ்ப்பாணம் பொலிஸ்

-4-ஆம் பக்கம் பார்க்க

## வடபகுதி ரயில் சேவைகள் ஞாயிறு முதல் ஆரம்பம்

கடந்த சனிக்கிழமை இரவு ஓமந்தையில் வடபகுதி ரயில் பாதை குண்டு வெடிப்புச் சம்பவத்தை பனாகொட மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ ராணுவத்தினரே செய்ததாக அரசாங்க செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. சேதமடைந்த ரயில் பாதை திருத்த வேலைகள் துரிதமாக நடைபெறுவதாகவும், அடுத்த ஞாயிறு முதல் வடபகுதிக்கான ரயில் சேவைகள் நடைபெறும் எனவும் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. திருகோணமலை, மட்டக்களப்பு பகுதக

—4 ஆம் பக்கம் பார்க்க

### இவர் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் பிற்பகல் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் இனந் தெரி

—4 ஆம் பக்கம் பார்க்க

### இன்று முதல் கரையோர பஸ் சேவை

தடை செய்யப்பட்ட கரையோரப் பாதைகள் ஊடாக வடபிராந்திய போக்குவரத்

-4-ஆம் பக்கம் பார்க்க

## தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் சேவை ஜூலை 15-ல் ஆரம்பமாகும்!

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கு மிடையிலான கப்பல் சேவையை மீண்டும் ஜூலை மாதம் பதினைந்தாம் திகதி முதல் ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் அக்டோபர் மாதத்தில் கடல் கண்காணிப்பு வலயச் சட்டம் அமுலுக்கு வந்ததை அடுத்து இப்பாதையில் சேவையிலீடுபட்ட ''இராமானுஜம்'' கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

இப்போது நிலைமை சகஜமானதையடுத்து கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கென இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனமும் புதிய கப்பலொன்றைக் கொள்முதல் செய்யவிருப்பதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

### வடமராட்சிப் பாடசாலைகளை திறக்குமாறு வேண்டுகோள்

வடமராட்சியில் மூடப்பட்டுள்ள நான்கு பிரதான பாடசாலைகளையும் தாமதமின்றித் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரஜைகள் குழுவின் இணைப்புக் குழுவினர் நேற்று யாழ் அரசாங்க அதிபரைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர்.

—4-ஆம் பக்கம் பார்க்க

## துரையப்பா ஸ்ரேடியத்தில் திங்கள் முதல் ஓய்வூதியம்

தபால் கந்தோர் ஊடாக வழங்கப்படும் ஜூன் மாதத்திற்கான பென்ஷன் பணம் யாழ் துரையப்பா ஸ்ரேடியத்தில் கீழ்வரும் திகதிகளில் பின்வரும் இடங்களுக்கு வழங்கப்படவுள்ளது

24ம் திகதி திங்கள்: நயினாதீவு, வசாவிளான், பருத்தித்துறை, கோப்பாய், புங்குடுதீவு, சங்கானை

25ம் திகதி செவ்: வேலணை, கொடிகாமம், கைதடி, கரவெட்டி, காங்கேசன்துறை, சுழிபுரம்

-4-ஆம் பக்கம் பார்க்க

## யாழ் பொலிஸ் நிலையத் தடைகள் நீக்கம்; நாவற்குழி சோதனை இல்லை!

யாழ். பொலிஸ் நிலையத்திற்குப் பாதுகாப்பிற்காகப் போடப்பட்டிருந்த பெரும்பாலான தடைகளும் நேற்றுடன் அகற்றப்பட்டு அப்பாதைகளினூடான போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொது நூல் நிலையத்திற்கு முன்பாகவும், மாநகர சபை மண்டபத்திற்கு முன்பாகவும் போடப்பட்டிருந்த தடைகள் நேற்றுக் காலையுடன் எடுக்கப்பட்டன. இதனையடுத்து நீதிமன்றத்திற்கு முன்பாகவும் மத்திய கல்லூரிக்கு முன்பாகவும் உள்ள வீதி வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது.

கோட்டைப் பக்கமாகவுள்ள வீதியிலும், மாநகர சபைப் பக்கமாக உள்ள வீதியிலும் பொது மக்கள் நேற்று எவ்வித பயமுமின்றி நடமாடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

யாழ் நகரப் பகுதிக்கு நேற்றுக் காலையில் இராணுவத்தினர் விஜயம் செய்த போதிலும்

—4 ஆம் பக்கம் பார்க்க

இஸ்லாமிய வாசக அன்பர்களுக்கு
ஈழமுரசு
தனது
ஈதுல் பித்ர்
வாழ்த்துக்களை
தெரிவிக்கிறது

### நயினாதீவு அம்பாள் உற்சவம்:

## தினமும் 12 மணித்தியாலம் யாத்திரிகர் படகுச் சேவை

(மண்கும்பான்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வருடாந்த உற்சவம் சென்ற 18ம் திகதி காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

-4-ஆம் பக்கம் பார்க்க

கல்விப் பணிப்பாளர் மன்சூர் பேச்சு:

# விளையாட்டு எதிர்காலத்து வாழ்க்கைக்கு வலுவூட்டும்!

(பளை)

"வெற்றியடையும் போது வீண் பெருமை கொள்ளாமலும், தோல்வியுறும்போது நம்பிக்கை இழக்காமலும் இருக்க வேண்டும். விளையாட்டுத் துறையில் ஈடுபடும் ஓர் இளைஞன் தன் எதிர்கால வாழ்க்கைக்கு இந்நிலையை வலுப்படுத்திக் கொள்ள முடியும்" என்று பளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் எம். எம். மன்சூர் கூறினார்.

நிகழ்ச்சிக்கு வித்தியாலய அதிபர் திரு. ஏ. பி. செல்லையா தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில், "விளையாட்டுக்கள் உடலுக்கும், உள்ளத்துக்கும் நலம் அளிக்கின்றன" என்றார்.

பச்சிலைப்பள்ளி வட்டாரக் கல்வியதிகாரி திரு. என். தணிகாசலம் பேசுகையில், வாழ்க்கை இன்று மிகவேககதியில் செயற்படுகிறது. தற்கால வாழ்க்கை முறையில் இளைஞர்கள் மட்டுமல்லாது பெரியோர்களும் கூட விளையாட்டுத்துறையில் ஈடுபாடுகாட்ட வேண்டும்" என்றார்.

போட்டியில் இளங்கோ, கம்பர், வள்ளுவர் இல்லங்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன. விளையாட்டுப் போட்டிக்குப் பொறுப்பாக திரு. ஏ. அலெக்ஸாண்டரும், செயலராகத் திருமதி. வி. தருமராஜாவும் கடமையாற்றினர். திருமதி பூவா. ஜூசைமரியதாசன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## வரி விளம்பரம்

### நடிகர் நடிகை தேவை

சினிமாவில் நடிப்பதற்கு நடிகர் நடிகை நல்ல கதை நாடக அனுபவம் வேண்டும் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம் செ. கணேஸ் ஐயர், சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

### ஏல விற்பனை

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், புதன்கிழமைகளிலும் காலையிலிருந்து அநேகவித பொருட்கள் யாழ்ப்பாணம் கல்லியங்காட்டுச் சந்தைக் கட்டடத்தில் விற்பனையாகும். உங்களிடம் விற்பனைக்கிருக்கும் பொருட்கள் எவையாலும் அனுப்பி வைக்கலாம். விபரங்களுக்கு: ஏலவிற்பனை நிலையம், கோப்பாய்.

### வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

# தீவுப் பகுதி பாடசாலைகளை 6 வலயமாக்க கோரிக்கை

(புங்குடுதீவு)

தீவுப்பகுதிப் பாடசாலைகள் ஆறு கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட வேண்டியது அவசியமென இப் பகுதிப் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் யாழ் கல்விப் பணிப்பாளருக்குத் தெரிவித்துள்ளனர்,

தற்போதுள்ள திட்டப்படி புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி பிரிவில் உள்ள புங்குடுதீவு, நயினாதீவு பாடசாலைகள் ஒரு வலயமாகவும், நெடுந்தீவு பாடசாலைகள் நெடுந்தீவு வலயமாகவும் பிரிக்கப் படுமென்றும் வேலணை கல்வி வட்டாரத்தில் உள்ள வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி பாடசாலைகள் வேலணை வலயத்தின் கீழும், ஏனைய ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவுப் பாடசாலைகள் ஊர்காவற்றுறை வலயத்தின் கீழும் அமையுமென்றும் கல்விப்பகுதி தெரிவித்துள்ளது.

இதற்குப் பதிலாக புங்குடுதீவுப் பாடசாலைகள் புங்குடுதீவு வலயத்தின் கீழும், நெடுந்தீவு பாடசாலைகள் நெடுந்தீவு வலயத்தின் கீழும், நயினாதீவு அனலைதீவு, எழுவைதீவுப் பாடசாலைகள் தனி ஒரு வலயமாகவும் ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவு பாடசாலைகள் முறையே ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவு வலயங்களாகவும் பிரிக்கப்பட வேண்டுமெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ் ஆலோசனைகளைக் கல்வியமைச்சுக்குச் சமர்ப்பிப்பதாக யாழ்-கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## சைவாலய உற்சவங்கள்

### ஏழாலையில்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அம்பலவாணேஸ்வரர் தேர்த்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அவ்வேளை இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

### மல்லாகத்தில்

மல்லாகம் கோணப்புலம் ஞானவைரவர் கோயில் ஏழாவது வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. விசேஷ அபிஷேகமும் நடைபெறும்.

### கட்டைப்பிராயில்

கட்டைப்பிராய் முத்துமாரி அம்மன் கொடியேற்றம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. முதலாம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும்.

## தலங்காவல் பிள்ளையார் மகோற்சவம்

திருநெல்வேலி கிழக்கு தலங்காவல் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 23ம் திகதி நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

29ம் திகதி பிற்பகல் தண்டிகை திருவிழாவும். ஜுலை 2ம் திகதி சப்பறமஞ்சம், 5ம் திகதி சப்பறம், 6ம் திகதி தேர், 7ம் திகதி தீர்த்தம் ஆகிய திருவிழாக்களும் நடைபெறும்.

பகல் திருவிழா காலை 9 மணிக்கும், இரவுத்திருவிழா மாலை 3 மணிக்கும் நடைபெறுமென ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ நா. சண்முகரத்தினக் குருக்கள் அறிவித்துள்ளார்.

## பாதிப்புற்றோர் விபரக்கொத்து

தடுக்கப்பட்ட வலயம், பாதுகாப்பு முகாம் அமைவு, வன்செயல்கள், காரணமாக இடம் பெயர்ந்து அகதிகளாக வாழும் மக்கள், உயிர் இழப்பு, உடைமை இழப்பு, படுகாயப்பட்டு உழைப்பு இழப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோரின் விபரக்கொத்து ஒன்றை பருத்தித்துறை பிரஜைகள் குழு தயாரிக்க ஏற்பாடு செய்து உள்ளது. இம்மாதம் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலான நான்கு நாட்களிலும் புலோலி பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நேரில் வந்து விபரம் தருமாறு துண்டுப்பிரசுரம் மூலம் கேட்கப் பட்டுள்ளனர். தொண்டர் நிறுவனங்கள் இவர்களுக்கு ஏதாவது வகையில் உதவ முடியுமா என்பதை ஆராயவே இந்த முயற்சி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரால் பிடிக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு இதுவரை விடுவிக்கப்படாத இளைஞர்களின் விபரங்களையும் அவர்கள் கோருகிறார்கள். குறித்த கிராமங்களுக்கு குறித்த திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இங்கு வந்து விபரங்களைத் தராதவர்கள் நிலைக்குத் தாம் பொறுப்பில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




✱ புலோலி சாரையடி கிருஷ்ணலிங்கம் கலைச்செல்வி தம்பதிகளின் மகள் சுஜனி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்,

✱ யாழ். நாயன்மார்கட்டு யோகராசா ரோகினிதேவி தம்பதிகளின் மகள் பிரதாஷினி இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ சுன்னாகம் யோகீஸ்வரன் நிர்மலாதேவி தம்பதிகளின் மகன் தனேஷ் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ புங்குடுதீவு வில்வரத்தினம் சரோஜா தம்பதிகளின் மகள் யசோதரா இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ கைதடி வடக்கு நடராசா சிவபாக்கியம் தம்பதிகளின் மகன் பிரதீபன் இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ சரசாலையைச் சேர்ந்த கந்தசாமி திருப்பதியம்மா தம்பதிகளின் புதல்வி மங்கை தனது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

## மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

இணுவில் கிழக்கு மருதனார் மடம் பகுதியில் விவசாயம் செய்து வரும் விவசாயிகள் தாம் இதுவரை காலமும் மண்ணெண்ணெய் பயன்படுத்தியே விவசாயம் செய்து வந்ததாகவும் இப்போதைய நிலையில் இவ்வாறு தம்மால் செய்வது சிரமமாக இருப்பதால் தமக்கு மின்சார வசதி பெற்றுத்தருமாறும்யாழ். அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்து மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்கள்,

இருபத்து ஏழு விவசாயிகள் கையொப்பமிட்டு சமர்ப்பித்துள்ள இம்மகஜரில் தமக்கு உடுவில் உபபணிமனை ஊடாக மின்சாரம் வழங்கநடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர்.

### உங்களுடையதா?

எஸ்தாக்கி அந்தோனிப்பிள்ளை என்பவருக்குரிய பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்,

### தொழிற் பயிற்சி

* Computer Programming Basic-Cobol ஆகிய Computer மொழிகளில் பயிற்சியளிக்கப்படும்.
* ரெலிவிசன், வீடியோ டெக் நிப்பிவறின் சகல இன ரெலிவிசன், வீடியோ டெக், மற்றும் எலக்ரோனிக் கருவிகள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
* எலக்றிக்கல் வயறிங் & வெல்டிங்,
* Diploma In Hotel Management வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் வேலைவாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படும்

பயிற்சி ஆரம்பம்: 24-06-1985

Jaffna Technical Institute,
ஸ்ரான்லி வீதி,
(றெயில்வேகடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.

**ISUZU** லொறி, மற்றும் **ELF** 150, 250, 350 ஆகியவற்றிற்கான மோட்டார் உதிரிப்பாகங்கள் சகாய விலையில்
(கொழும்பு CWE இல் கொள்வனவு செய்யும் விலையில்)
யாழ்ப்பாணத்தில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி C.W.E. ஸ்தாபனத்தின் வடபிராந்திய விற்பனையாளராக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம்.

கொழும்பு மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல. 37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23745

### ஈத் முபாரக்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
புனித ரமழான் பெருநாள் நல்வாழ்த்துகளைத்
தெரிவித்துக் கொள்கிறோம்

அமீர் ரெக்ஸ்
(வட இலங்கையில் பிரசித்த தையல் நிலையம்)
73, பெரிய கடை, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23021

## உருக்கமான வேண்டுகோள்

ஜோதி ஜுவலர்ஸ்
34, கே. கே. எஸ். றோட்,
சுன்னாகம்.

17-6-85 அன்று இரவு இனம் தெரியாத நபர்களால் எமது ஸ்தாபனத்தில் கொள்ளை அடிக்கப்பட்ட நகைகள் யாவும் பொது மக்களால் எமது ஸ்தாபனத்தில் அடைவுக்காக வைக்கப்பட்டதாகும். இதனால் பாதிப்படைபவர்களும் பொதுமக்களாவர். ஆகவே தயவுசெய்து பொதுமக்களின் நன்மைகருதி கொள்ளையிட்ட நகைகளை திரும்ப ஒப்படைக்கும்படி அன்பாக வேண்டுகிறோம்.

இப்படிக்கு
ஜோதி ஜுவலர்ஸ்
அடைவு பிடிப்பாளர்

## நோன்புபெருநாள் வாழ்த்துகள்

இல்லத்தரசிகளே! இதோ!!
உங்கள் உள்ளம் மகிழ என்றும் தரமானதையே நாடுங்கள்.
இதோ உங்கள் முன்னிலையில்
"நியூ அங்கலின் பிரேஸியர்கள்"

✱ இல்லத்தரசிகளே! தொழில் புரியும் பெண்மணிகளே!! நீங்கள் பிரேஸியர் வாங்கும்போது எப்போதும் கேட்டு வாங்க வேண்டியது நியூ அங்கலின் பிரேஸியர் என்று கேட்டு வாங்குங்கள்.

✱ நியூ அங்கலின் பிரேஸியர்கள் எப்போதும் மேனியின் அழகை மெருகூட்டுவதுடன் சொகுசும், சௌகரியமும், அழகும், நாகரிக அமைப்பும் ஒருங்கே அமைந்துள்ள முறையில் தயாரிக்கப்பட்டது.

✱ பொதுவாக பெண்மணிகளே! நியூ அங்கலின் பிரேஸியர் அணிவதால் பெண்மைக்கு மெருகூட்டும் வகையில் இளமைக்கு எழிலூட்டுவது மட்டுமல்ல நிச்சயம் பெருமையும் பூரிப்பும் அடைவீர்கள்.

✱ மறக்க வேண்டாம். எப்போதும் எங்கும் கேட்டு வாங்குங்கள் நியூ அங்கலின் பிரேஸியர்கள்.

தலைமை நிறுவனம்,
7/1, புதிய வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

### உதய சிந்தனை

உங்களுக்குக் கஷ்டத்தைத் தர அல்லாஹ் நாடவில்லை. உங்களைத் தூய்மையாக்கவும், தன் அருட் கொடைகளை உங்கள்மீது நிரப்பவுமே அவர் நாடுகிறார். -- திருக்குர்ஆன்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

20-6-1985 வியாழக்கிழமை (குரோதன ஆனி 6)

# யுத்த நிறுத்த அறிவிப்பு மயக்கம் தருகிறதே!

இலங்கை இந்தியத் தலைவர்களின் உச்சிமகாநாட்டிற்குப் பின்னர் பொதுவாக அனைவராலும் பரவலாகப் பேசப்பட்டு வந்த 'யுத்த நிறுத்தம்' பற்றிய அறிவிப்பு, நேற்று முன் தினம் அமைச்சர் அத்துலத் முதலியினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

பிரதானமான ஐந்து தமிழ் தீவிரவாத இயக்கங்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குக் கைச்சாத்திட்டுள்ளதாக அமைச்சர் அறிவித்துள்ளார்.

அதேவேளையில், வடக்கில் ராணுவச் சோதனை, வீதிச் சோதனை என்பன நடைபெறமாட்டாதென்றும், கடலில் மூன்று மைல் தூரத்திற்கு மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் வடக்கின் ராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் வனசிங்கா அறிவித்துள்ளார்.

அமைச்சர் அத்துலத் முதலி கொழும்பில் தீவிரவாத இயக்கங்களின் உடன்படிக்கையை வெளியிட்ட அதே நேரத்தில், பிரிகேடியர் வனசிங்கா தளர்த்தப்படும் கெடுபிடிகள் பற்றி யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளார்.

அமைச்சரும், பிரிகேடியரும் விடுத்துள்ள அறிவிப்புகளால் ஓரளவுக்கு மகிழ்ச்சியடையும் அதேவேளையில், வெளியிலிருந்து கிடைத்துள்ள செய்திகள், 'மயக்கத்தை' ஊட்டுவனவாகவுள்ளதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இவ்வாறான யுத்த நிறுத்த உடன்படிக்கை எதிலும் எந்தவொரு இயக்கமும் ஒப்பமிடவில்லையெனவும், உடன்படிக்கையின் ஷரத்துகள் ஏற்கக் கூடியதாக இல்லையென்றும் சென்னையிலுள்ள விடுதலை இயக்கங்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. நேற்று முன்தினமிரவே 'சுடச்சுட' அறிவித்தது.

''நாங்களாக தாக்குதல் நடத்த மாட்டோம்; ஆயுதப் படையினர் தாக்கினால் பதில் தாக்குதல் நடத்துவோம்'' என்றும் இவர்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

அப்படியானால் அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்த உடன்படிக்கையும், ஒப்பமிட்ட கதையும் ஆதாரமற்றவையா?

வழக்கம் போல போர் நிறுத்தமும், "கனவான்கள் ஒப்பந்தமாகத்தான்' செய்யப்பட்டதோ என்ற ஐயமும் கூட எழுகின்றது.

இது ஒரு தற்காலிக யுத்த நிறுத்தம் என்றும், பதினெட்டு வாரங்களுக்குத்தான் அமுலிலிருக்கும் என்றும் பி. பி. ஸி. மேலும் விபரித்துள்ளது.

அதேவேளையில், இந்தச் சமாதான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான இந்திய அரசு சாதித்துவரும் மௌனமும்கூட இவ் விடயத்தில் சந்தேகத்தையே வலுப்படுத்துகின்றது.

அது மட்டுமன்றி, இவ்வாறான ஒப்பந்தம் பற்றியும், யுத்த நிறுத்தம் பற்றியும் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று பாரத வெளியுறவு இலாகா அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

யுத்த நிறுத்தம் பற்றிய செய்தியை அமைச்சர் அத்துலத் முதலியை மேற்கோள் காட்டி ஒலிபரப்பிய இந்திய வானொலி அதற்குமேல் எதனையும் தெரிவிக்கவில்லை.

இவைகளைப் பார்க்கும்போது, இந்திய மத்திய அரசுக்கோ, தமிழ்நாடு மாநில அரசுக்கோ கூடத் தெரியாமல், இலங்கை அரசும், தீவிரவாத இயக்கங்களும் உடன்பாட்டிற்கு வந்திருக்கலாமென்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வேளையில், யுத்த நிறுத்த ஒரு பக்கச் செய்தியை அறிவித்த இலங்கை அரசு, இதனைப் பற்றி மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை உடனடியாக நீக்க சில விபரங்களைத் தாமதமின்றி வெளியிட வேண்டும்.

ஐந்து பிரதான இயக்கங்கள் ஒப்பமிட்டதாகக் கூறுவதை விடுத்து, அந்த ஐந்து இயக்கங்களின் பெயர்களையும் வெளியிடக் கூடாதா?

இவ் இயக்கங்களின் தலைவர்கள் ஒப்பமிட்ட ஆவணங்களை பத்திரிகைகள், ரெலிவிஷன் போன்ற சாதனங்கள் மூலம் மக்கள் பார்வையிட வைக்க முடியாதா?

என்ன அடிப்படையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டதென்ற விபரங்களை 'அப்பாவி மக்கள்' அறிய வைக்கக் கூடாதா?

இது ஒரு புறமிருக்க, யுத்த நிறுத்தம் உண்மையானால், வடக்கில் அமுல்படுத்தப்பட்டு வரும் யுத்த கால சட்ட திட்டங்களை ஏன் வாபஸ் பெறக்கூடாது?

போராளிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டார்களானால், திறக்கப்பட்ட ராணுவ முகாம்களும், ஆயிரக்கணக்கான ஆயுதப் படையினரும் இங்கு அவசியம்தானா?

கடலில் மீன் பிடிக்கக் கட்டுப்பாடு எதற்காக? கண்காணிப்பு வலயச் சட்டங்கள் தொடர வேண்டுமா?

மக்களை மயக்கத்திலிருக்க விடாமல், உண்மை நிலையை தெட்டத் தெளிவாக தெரியவைக்க வேண்டியது இலங்கை அரசின் முக்கிய பணியாகும்.

★ பெய்றூட் அகதி முகாம் நிர்வாகப் பிரச்சினை:

# டமாஸ்கஸில் போர் நிறுத்த உடன்பாடு உருவாகியது!

(டமாஸ்கஸ்)

டமாஸ்கஸில் லெபனான் ஷியாட் முஸ்லீம் அமால் இயக்கத்தினரும் பாலஸ்தீனிய தேசிய விடுதலை முன்னணியினரும் இருபத்து ஏழுநாள் யுத்தத்தை நிறுத்திக் கொள்வதென உடன்பாடு ஒன்றினைச் செய்து கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. பெய்றூட்டில் உள்ள மூன்று பாலஸ்தீனிய அகதி முகாம்களை யார் கட்டுப்படுத்துவது என்ற அதிகாரப் போராட்டமே இவ்விருசாராருக்குமிடையே யுத்தமாக மாறியது. இவர்கள் சிரியாவின் உப ஜனாதிபதி சதாம் முன்னிலையில் இந்த சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இப்போரின் விளைவாக ஐநூற்றுத் தொண்ணூறு பேர் மடிந்தனர். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என டமாஸ்கஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இப்போர் நிறுத்தத்திற்கு சிரியா ஆக்கபூர்வமான பங்களிப்பினைச் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐ. நா. செயலர் உலக நாடுகளிடம் கோரிக்கை

## நமீபிய இடைக்கால அரசை அங்கீகரிக்க வேண்டாம்

(நியூயோர்க்)

தென்னாபிரிக்க பிரிட்டோரியா அரசாங்கம் பிரகடனம் செய்துள்ள நமீபிய இடைக்கால அரசாங்கத்தை அங்கீகரிக்கக் கூடாதென ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலாளர் திரு. பெரஸ்டி குவெலர் சகல நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்க அரசாங்கத்தின் இந் நடவடிக்கை சர்வதேச ரீதியில் பலத்த கண்டனத்தை உருவாக்கியுள்ளது.

## நமது கழகத்தவர் விடுதலையாகினர்

(மதுரை)

இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசு அசமந்தப் போக்கில் இருப்பதாகக் கூறி மதுரையில் திருப்பதி எக்ஸ்பிரஸ் ரயில்முன் மறியல்செய்ய முற்பட்டபோது பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த நமது கழகத்தைச் சேர்ந்தவர்கள் மதுரை மாஜிஸ்திரேட்டினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கழகத் தலைவர் திரு. எஸ். டி. சோமசுந்தரமும் மற்றும் ஐநூறு தொண்டர்களுமே இவ்விதம் விடுதலையானவர்கள் ஆவர்.

## ஜெனீவாவில் மீண்டும் ரஷ்ய அமெ. அதிகாரிகள் சந்திப்பு

(ஜெனீவா)

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான விண்வெளி ஆயுத பாவனை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் மூன்றரை மணித்தியாலங்கள் வரை நீடித்ததாக ஜெனீவா அறிக்கைகள் தெரிவித்தன.

கடந்த மாதம் முப்பதாம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமான இச் சந்திப்பின் மூன்றும் கட்டம் இது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி திரு. புஷ் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் போது ஜெனீவாவுக்கும் செல்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சோவியத் பிரதிநிதிகளுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் இவ்விஜயம் அமையும் என்று வாஷிங்டனில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சோவியத் பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கக் கூடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சட்ட வல்லுநர்கள் ஆலோசனை:

## பயனுள்ளதாக அமைந்தது இந்திய அதிகாரி கருத்து

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்தும் புதுடில்லியில் ஆலோசனை நடத்துவதில் ஈடுபட்டிருந்த இலங்கை பாரத அரசியல் சாசன வரைவு நிபுணர்களும், சட்ட வல்லுநர்களும் தமது பணியைப் பூர்த்திசெய்து கொண்டுள்ளனர் என்று நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

இப் பேச்சுவார்த்தைகள் பயனுள்ள வகையில் அமைந்தது என்று பாரத வெளிநாட்டமைச்சின் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாரதக் குழுவுக்கு அட்டோர்னி ஜெனரல் திரு. பராசரனும் இலங்கைக் குழுவுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் இளைய சகோதரர் ஹெக்டர் ஜெயவர்த்தனவும் தலைமை தாங்கினர்.

இலங்கைக் குழுத் தலைவர் மேலும் ஒரு தினங்கள் புதுடில்லியில் தங்கியிருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## குஜராத் முதல்வர் கோரிக்கை

(குஜராத்)

குஜராத்தில் விரைவில் நிலைமை சுமூகமாக அதிகாரிகளுடன் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமென குஜராத் முதலமைச்சர் திரு. சோளங்கி பிரமுகர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் நேற்று கோரிக்கை விடுத்தார்.

இங்கு தொடர்ந்து சில கல்வீச்சு, தீவைப்புச் சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் அரசு நடவடிக்கை

## அரசியல் கைதிகள் பலருக்கு பொது மன்னிப்பு கிடைக்கும்

(டாக்கா)

பங்களாதேஷில் அறுபத்து நான்கு அரசியல் கைதிகள் இம்மாத இறுதிக்குள் விடுதலை செய்யப்படுவர் என்று நேற்று டாக்கா அறிக்கைகள் தெரிவித்தன.

முஸ்லீம்பெருநாளையொட்டி மேலும் இருநூற்று இரண்டு கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஆந்திராவில் கோஷ்டி மோதல்

(ஆந்திரா)

ஆந்திராவில் இரு கோஷ்டிகளுக்கு மத்தியில் மூண்ட கலவரத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் காயமடைந்தனர். இதனையடுத்து குறிப்பிட்ட பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கட்டுப்பாடு நீடிப்பு

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பார்வையாளர்களுக்கான கட்டுப்பாடு மேலும் இருவாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவுக்கு உலக வங்கி 220 கோடி டாலர் கடனுதவி

(பாரிஸ்)

நடப்பு வருடத்தில் பாரதத்திற்கு உலக வங்கி இருநூற்றி இருபது கோடி டாலர் கடனுதவி வழங்கவுள்ளது.

இத்தகவல் பாரிஸில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் வெளியிடப்பட்டது.

நிலைமையை அனுசரித்து மேலும் இருபது முதல் முப்பது கோடி டாலர் வரை உலக வங்கி பாரதத்திற்குக் கடன் உதவி அளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## புயல் சேத மதிப்பீடு

(டாக்கா)

பங்களாதேஷ் புயல் சேதங்களை மதிப்பீடு செய்ய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி டாக்கா வந்துள்ளார்.

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க நீண்ட காலத் திட்டம் ஒன்றும் தீட்டப்பட்டுள்ளது.

## மறுப்பு

(புதுடில்லி)

இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள 'போர் நிறுத்தம்' பற்றி கருத்து வெளியிட புதுடில்லியில் அரசு அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

இது பற்றிய தகவல் தமக்கு இன்னமும் தெரிவிக்கப்படவில்லை என அவர்கள் கூறினர்.

ஈழமுரசு

## பாதுகாப்புக் காரணத்துக்காக அவசரகால சட்டம் நீடிப்பு

தீவிரவாத இயக்கங்கள் தமது நடவடிக்கைகளை நிறுத்த இணங்கியுள்ளதால், நாட்டில் எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியதாக அமைச்சரவைப் பேச்சாளரும், ராஜாங்க அமைச்சருமான ஆனந்த திஸ ட அல்விஸ் நேற்று தெரிவித்தார், பத்திரிகைத் தணிக்கை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும், பாதுகாப்பு காரணங்களுக்காக அவசரகாலச் சட்ட விதிகள் மேலும் ஒருமாதம் நீடிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் சொன்னர். பாராளுமன்றம் நாளை கூடி அவசரகால நிலை நீடிப்புப்பற்றி விவாதிக்கும்.

### புதிய நிலைமையை அனுசரித்து

# மீன், இறைச்சிக் கடைகள் மீண்டும் பண்ணைக்கு வரும்!

## நகர வீதிகளையும் திருத்துவதற்கு அனுமதி

பண்ணையில் இயங்கி வந்து அங்கிருந்து இடம் மாற்றப்பட்ட மீன் கடைகளும் இறைச்சிக் கடைகளும் அநேகமாக இன்னும் ஒரு வாரத்திற்குள் பழைய இடங்களிலேயே மீண்டும் இயங்கும் எனத் தெரிய வந்துள்ளது.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் வனசிங்காவை நேற்றுச் சந்தித்து இப்பிரச்சினைகள் பற்றி உரையாடியதையடுத்து இப்பகுதியில் கடை வைத்திருப்பவர்கள் பயமின்றி வியாபாரம் செய்யலாம் எனவும் துப்பாக்கிப் பிரயோகம் எதுவும் இடம் பெறாது எனவும் பிரிகேடியர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ். நகரப் பகுதிகளிற்குட்பட்ட வீதிகளை திருந்துவதற்கும் இராணுவ இணைப்பதிகாரியின் அனுமதி கிடைத்துள்ளது, இதனால் இன்னும் சில தினங்களுக்குள் வீதித் திருத்த வேலைகள் ஆரம்பமாகும் என மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

### மரண தண்டனை நீக்க யோசனை

நாட்டில் தற்போதுள்ள மரண தண்டனையை நீக்குவது பற்றி அமைச்சரவையில் நேற்று ஆராயப்பட்டது. இதை நீக்குமாறு நேற்று பல அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து இது ஆராயப்பட்டது.

### இன்று முதல்....

...1ஆம் பக்கத் தொடர்

துச் சபை இன்றுமுதல் மீண்டும் தனது சேவைகளை நடத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### வடபகுதி ரயில்....

— 1-ஆம் பக்கத் தொடர்

ளுக்கான ரயில்சேவை அடுத்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### இவர் மீது....

யாத இளைஞர்கள் சிலரால் படுமோசமாக தாக்கப்பட்டார். கிளிநொச்சி பொலிஸ் இராணுவ கூட்டு முகாமைச் சேர்ந்த அவர் கிளிநொச்சி பஸ் நிலையத்துக் கருகாமையில் ஒரு கடையில் பொருட்கள் கொள்வனவு செய்துகொண்டிருந்த போதே இவ்வாறு தாக்கப்பட்டாராம்.

### வேம்படி மாணவிகள் இரத்த தானம்

(இருபாலை)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் உயர்கல்வி கற்கும் மாணவிகள் நேற்று யாழ். வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்த தானம் செய்தனர்.

இரத்த வங்கியில் இரத்தம் பற்றுக்குறையாக இருப்பதன் காரணமாகவும், நோயாளிகளின் அவசர தேவைகளின் பாவனைக்காகவுமே அவர்கள் இரத்ததானம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### தினமும் 12....

-1-ஆம் பக்கத் தொடர்

மேற்படி ஆலய உற்சவ தினங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்களின் வசதி கருதி குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து நயினாதீவு இறங்குதுறைக்குமிடையே காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரைக்கும் ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு படகு வீதம் விடப்பட்டு வருகின்றது. குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து நயினாதீவிற்குச் செல்லும் படகுகள் அனைத்தும் புத்த விகாரைக்கு முன்புள்ள துறைமுகத்திற்குச் சென்று அங்கு பரிசோதனைக்குள்ளாகி பின்னர்தான் நயினாதீவு துறைமுகத்திற்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

ஒவ்வொருவரின் தேசிய ஆள் அடையாள அட்டைகளைப் பார்வையிட்ட பின்பு அவர்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். எனவே நயினாதீவிற்குச் செல்பவர்கள் ஆணாகிலும் சரி, பெண்ணாகிலும் சரி தங்களுடன் தங்களுடைய தேசிய ஆள் அடையாள அட்டைகளைத் தவறாது எடுத்துச் செல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

### துரையப்பா....

—1ஆம் பக்கத் தொடர்

26ம் திகதி புதன்: சாவகச்சேரி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, கொக்குவில்

27ம் திகதி வியாழன்: அச்சுவேலி, வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை

28ம் திகதி வெள்ளி: யாழ்ப்பாணம், சுன்னாகம், உருமபராய்

ஜூலை 2ம் திகதி செவ்வாய்: யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை, வண்ணார்பண்ணை, அனவெட்டி

### வடமராட்சிப் ..

... 1ஆம் பக்கத் தொடர்.

பஸ், ரயில் சேவைகளை மீண்டும் வழமைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், எரிபொருளைத் தாராளமாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இவர்கள் மேலும் வேண்டினர்.

பேராசிரியர் கே. சிவத்தம்பி தலைமையில் சென்ற இக்குழுவில், பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், வண.பிதா.மைக்கல்சாமி ஆகியோர் உட்பட மொத்தம் பன்னிரண்டு பேர் கலந்துகொண்டனர்.

### யாழ் பொலிஸ்....

—1 ஆம் பக்கத் தொடர்

எவ்வித பதற்றமோ பீதியோ ஏற்படவில்லை. இராணுவத்தினரும் சகஜமாகவே பரபரப்பின்றி வந்து சென்றார்கள்.

நாவற்குழி முகாமிலும் சோதனை நடைபெறுவதால் வழக்கமாக 30, 40 நிமிடம் அங்கு செலவிடுபவர்கள் யாழ்ப்பாணத்திற்கு நேரகாலத்துடன் வந்து போகக் கூடியதாயிருந்தது.

### அமிர்: யுத்த:....

—1 ஆம் பக்கத் தொடர்

தமிழ் ஈழத் தலைவர்களுக்குமிடையே நிலவி வரும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குப் பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்த போர் நிறுத்தம் வழி வகுக்கும் எனவும் திரு. பழனியாண்டி தெரிவித்துள்ளார்.

### உண்மை விளக்கும் ஒரு பிரசுரம்

கோண்டாவில் குமரகோட்டம் பகுதியில் இடம்பெற்ற சில சம்பவங்களில் புளொட், ரெலா ஆகிய இரு இயக்கங்களும் சம்பந்தப்பட்டதாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் எதுவித உண்மையுமில்லை என்றும், மற்றொரு விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவரே இதில் ஈடுபட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், "நியாய விரும்பிகள் கோண்டாவில்" என்ற பெயரில் வெளியான துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "உண்மைகளை உணர்த்திடுவோம்" என்ற தலைப்பில் இப் பிரசுரம் வெளியாகியுள்ளது.

### ஐந்து பொலிஸ்....

-1-ஆம் பக்கத் தொடர்

நிலையத்துக்கு எந்தவிதமான சோதனையோ, தடையோ, கட்டுப்பாடோ இன்றி நேற்று முதல் பொது மக்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். குடாநாட்டில் மீண்டும் பொலிஸாரின் பகல் ரோந்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

யாழ். ப. நோ. கூ. சங்கத் தளபாடங்கள், உபகரணங்கள் ஏல விற்பனை

கடந்த 17-6-85, 18-6-85 ஆகிய திகதிகளில் எங்களால் வெளியிடப்பட்ட, 22-6-85 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு இல 17, கண்டி வீதியிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலையில் நடக்கவிருந்த ஏல விற்பனையும், 23-6-85 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதான வீதியிலிருக்கும் ரவுண் சொப் கிளையில் நடைபெறவிருந்த ஏல விற்பனையும் திகதி பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

பதில் பொது முகாமையாளர்

127, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்,
18-6-85.


## மரண அறிவித்தல்

### திருமதி பத்மலோசனி முத்தையா

காலம்சென்ற சரவணமுத்து முத்தையாவின் மனைவி பத்மலோசனி காலமானார். இவர் பத்மாவதியின் அன்புச் சகோதரியும், வல்லிபுரம் காலம்சென்ற ராகவன், விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவர். இவர் கிறிஸ்ரி (சரா) F. A. O. Rome; சீற்ரா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை), இந்திரன் (நைஜீரியா), டாக்டர் ரவி (U K), டாக்டர் லோகன் (U. K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவர். இசோல்டே, கிளவ் ஜெயசிங்கம் (இ. போ. ச. கோண்டாவில்) ரஞ்சி, பிறமிலா, டாக்டர் மங்கை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து இன்று (20-6-85) வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் நல்லடக்கத்திற்காக பரி. யோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

முகவரி; 474, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சி (புவனம்மா) இரத்தினம்

(18—6—85) இல் காலமாகிவிட்டார்.

இவர் இரத்தினத்தின் அன்பு மனைவியும். சுதந்திரராணி, வசந்தாதேவி (ஆசிரியை), புவனேஸ்வரன் (ஆசிரியர்), சித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், பேரின்பநாதன், லோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், பத்மபிரியா, ரமணகுமரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 20—6—85 வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் கரம்பனில் நடைபெறும்.

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை

கு. நித்தியானந்தம்,

## மரண அறிவித்தல்

### கனகராயன்குளம்

### வேலு தர்மர் காலமாகிவிட்டார்

இவர் கனகராயன்குளம் ஐயனார் கோவில் பிரதம பூசகரும் இராசம்மாவின் அன்புக் கணவரும் பூபதி, நாகேஸ்வரி, மகேந்திரம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுப்பிரமணியம், கந்தையா, காலஞ்சென்ற சுகாதாரப் பரிசோதகர் இளையசிங்கம் ஆகியோரின் மாமனாரும் சிவசிதம்பரம், சீவரத்தினம் மலர், தேவி, சரஸ், மகாலிங்கம், கிளி, ராணி, பாக்கியம், தேவராசா, இலங்கநாதன் (கனடா), தவநாதன் (ஜேர்மனி), ஜோதிநாதன் (சுவிஸ்), கோபிலங்கநாதன் (மக்கள் வங்கி, முல்லைத்தீவு), அஞ்சலை, டிங்கநாதன் (சுவிஸ்), மின்னொளி, லிங்கநாதன், பவநாதன் (ஜேர்மனி), காந்தினி, கமலா நித்தியானந்தராசா (லண்டன்), குபேந்திரன், தர்மவிலாஸ் கனகராயன்குளம் ஆகியோரின் அன்புப் பேரனும், கேம்ராஜ் ரஜீவ், துஷ்யந்தன், கிரிஷாந்தன் ஆகியோரின் பூட்டனும் கோணலிங்கத்தின் சிறிய தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20ம் திகதி வியாழக்கிழமை கனகராயன்குளத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வாடைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 20-6-85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது, தொலைபேசி: 23336.